

திருச்சியில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு நேற்று (1.4.2026) வருகைபுரிந்த கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், அங்கு நடைபயிற்சி மேற்கொண்டபோது, திருச்சி காந்திநகர் மார்க்கெட் பகுதியில் அங்குள்ள வாக்காளர்களை சந்தித்து, வாக்குச் சேகரித்தார். உடன், கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் உள்ளனர்.



திருச்சியில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு நேற்று (1.4.2026) வருகைபுரிந்த கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், அங்கு நடைபயிற்சி மேற்கொண்டபோது, சாலையோர தேநீர் கடையில் தேநீர் அருந்தினார். உடன், கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் உள்ளனர்.

## சட்டப்பேரவைத் தேர்தல் – 2026

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - காணொலி மூலம் அனைத்துத் தொகுதிகளிலும் உள்ள கழக நிர்வாகிகளோடு கலந்துரையாடல்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,** அனைத்து தொகுதிகளிலும் உள்ள கழக நிர்வாகிகளுடன் 03.04.2026 (வெள்ளிக்கிழமை) நண்பகல் 12.00 மணிக்கு காணொலி மூலம் கலந்துரையாடுகிறார்.

அதுபோது, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியளவிலும் ஓரிடத்தில் தக்க ஏற்பாடுகளைச் செய்யும்படி மாவட்டச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள், கழக வேட்பாளர்கள், பகுதி – நகரம் – ஒன்றியம் வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதிக்கான வேட்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

காணொலி இணைப்பு தலைமைக்கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.
நாள் : 31.03.2026.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## திருவாரூரில் நடைபெற்ற

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி பிரமாண்ட பிரச்சாரப் பொதுக்கூட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மக்கள் வெள்ளமென திரண்டு உற்சாக வரவேற்பு!

திருவாரூர்,ஏப்.2- 2026 சட்டமன்றதேர்தல் பிரச்சாரத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, நன்னிலம் தொகுதிகளில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களான பூண்டி. கே.கலைவாணன், முனைவர் டி. ஆர்.பி.ராஜா, க.மாரி முத்து , முகமது முபாரக் ஆகியோரை அறிமுகப்படுத்தி தேர்தல் பரப்புரையை திருவாரூர் தெற்கு வீதியில் துவக்கி வைத்தார்.

காலை 10:30 மணிஅளவில் திருவாரூர் வந்தடைந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், திருவாரூர் காட்டூரில் அமைந்துள்ள தாயார் அஞ்சுகம் அம்மாள் நினை விடத்தில் மலர் மாலைஅணிவித்து மரியாதை செய்தார் . பின்னர் கலைஞர் கோட்டத்தில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர்அவர்களின் திருஉருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

பின்பு சன்னதி தெருவில் மாவட்டகழக நிர்வாகிகள் கூட்டணிகட்சி நிர்வாகிகள் ஆகியோரிடம் கலந்துரையாடினார். மாலை 6.30. மணி அளவில் தெற்குவீதியில் அமைந்துள்ள பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி தேர்தல் பிரச்சாரத்தை துவக்கினார்.

முன்னதாக திருவாரூர் மாவட்ட எல்லைக்கு வந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு திருவாரூர் மாவட்ட கழக செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருவாரூர் பிரச்சார பொதுக்கூட்டத்தில் வை.செல்வராஜ் எம்.பி., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜ மாணிக்கம், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ. கே.எஸ்.விஜயன், தாட்கோதலைவர் நா.இளையராஜா,தேர்தல் தொகுதி பார்வையாளர்கள் எஸ். கே.வேதரத்தினம், செளமியன் வைத்யநாதன், ஜெக வீர பாண்டியன், ராஜசீனிவாசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தலையாமங்கலம் ஜி.பாலு, ப.ஆடலரசன், டி.செல்வம், நகர் மன்ற தலைவர்கள் புவனப்ரியா செந்தில், மன்னை த.சோழராஜன், கவிதா பாண்டியன், பாத்திமா பாஷீரா, கலைச்செல்வி, மகாலெட்சுமி, மாவட்ட துணை செயலாளர்கள் எம். எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன்,சாந்திபாஸ்கர், மு. வெங்கடேசன், விவசாய தொழிலாளர் அணி மாநில துணை செயலாளர் இரா.சங்கர், பொதுக்குழு உறுப்பினர்கள் கே. எஸ்.எஸ். தியாகபாரி,டி. செந்தில், செல்வ. ஜெயதேவன், கலைவாணி மோகன், கணபதி, முருகேசன், கமாலுதீன்.

ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன் , கோ. தெட்சிணாமூர்த்தி,ஆர். பாலச் சந்தர், சேகர் கலியபெருமாள், எஸ்.ஜோதிராமன, கேப்டன்.செல்வராஜ், ப. பிரபாகரன், புலிவலம். ஏ.தேவா. வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், இரா. மனோகரன், ஐ.வி.குமரேசன், ப.பிரகாஷ், வே. மனோகரன், டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேரி சிவா,நா.கவியரசு, கே.வி. கே.ஆனந்த்,

நகர செயலாளர்கள் வீரா.கணேசன், ஆர்.எஸ். பாண்டியன், வாரை.எஸ். பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி,பா.சிவநேசன்,வி. பக்கிரிசாமி, ஏ.கே.டி. சேரன், ராம ராஜன், சிவ. தியாகு, பூண்டி. கலைவேந்தன்,

சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பனங்குடி. ஏ. எஸ். குமார், எஸ். பகலவன், ப. அரவிந்த், எம். என் . ராஜா, எண்கண் சா. மணி, ராஜ். என்கிற கருணாநிதி, குன்னலூர் அன்பழகன், வீரா. தேசபந்து, ஷோபா. கணேசன், விமலா பாலு, மீனாட்சிசூர்யாபிரகாஷ், நந்தகுமார், தாஜூதீன், ஆர்.வி.ஆனந்த் , விநாயகமூர்த்தி, ஆர்.வி.எல்.ரவிச்சந்திரன், காட்டூர் சதீஷ்குமார், கலைவாணன்,கரிகாலன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிற்சங்கத்தினர், வர்த்தகர்கள், வணிகர்கள், மகளிர் அமைப்பினர், கழக தோழர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

## சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் 2026

### தி.மு.க. தலைமையிலான
### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



கழக துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி** எம்.பி. அவர்களின்

# தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | நேரம் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 2.4.2026 | காலை 11 மணி | சிவகங்கை | மானாமதுரை |
| ” | மாலை 4.00 மணி | மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் |
| ” | மாலை 6.00 மணி | மதுரை மாநகர் | மதுரை தெற்கு |
| ” | இரவு 8.00 மணி | மதுரை மாநகர் | மதுரை மத்திய |
| 3.4.2026 | காலை 11 மணி | திண்டுக்கல் கிழக்கு | நிலக்கோட்டை |
| ” | மாலை 4.00 மணி | ” | ஆத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் |
| ” | இரவு 8.00 மணி | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் |
| 4.4.2026 | காலை 11.00 மணி | திருச்சி தெற்கு | மணப்பாறை |
| ” | மாலை 4.00 மணி | திருச்சி மத்திய | திருவரங்கம் |
| ” | மாலை 6.00 மணி | கரூர் | குளித்தலை |
| ” | இரவு 8.00 மணி | ” | கிருஷ்ணராயபுரம் |
| 5.4.2026 | காலை 11.00 மணி | திருப்பூர் கிழக்கு | காங்கேயம் |
| ” | மாலை 4.00 மணி | திருப்பூர் மத்திய | பல்லடம் |
| ” | மாலை 6.00 மணி | கோவை தெற்கு | சூலூர் |
| 5.4.2026 | இரவு 8.00 மணி | கோவை வடக்கு | கவுண்டம்பாளையம் |
| 6.4.2026 | மாலை 4.00 மணி | சென்னை தெற்கு | மதுரவாயல் |
| ” | மாலை 5.00 மணி | சென்னை கிழக்கு | அம்பத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சென்னை வடகிழக்கு | மாதவரம் |
| ” | மாலை 7.00 மணி | சென்னை வடகிழக்கு | திருவொற்றியூர் |
| ” | இரவு 8.00 மணி | சென்னை கிழக்கு | திரு.வி.க.நகர் |
| 7.4.2026 | காலை 10.00 மணி | திருவள்ளூர் மேற்கு | திருத்தணி |
| ” | பகல் 12.00 மணி | இராணிப்பேட்டை | சோளிங்கர் |
| ” | மாலை 4.00 மணி | திருவண்ணாமலை வடக்கு | ஆரணி |
| ” | மாலை 6.00 மணி | திருவண்ணாமலை தெற்கு | போளூர் |
| ” | இரவு 8.00 மணி | ” | கலசப்பாக்கம் |
| 8.4.2026 | காலை 10.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் |
| ” | பகல் 12.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | சங்கராபுரம் |
| ” | மாலை 4.00 மணி | சேலம் கிழக்கு | ஆத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சேலம் மத்திய | சேலம் தெற்கு |
| ” | இரவு 8.00 மணி | ” | சேலம் மேற்கு |
| 9.4.2026 | காலை 10.00 மணி | நாமக்கல் மேற்கு | திருச்செங்கோடு |
| ” | பகல் 12.00 மணி | ” | குமாரபாளையம் |
| ” | மாலை 4.00 மணி | ஈரோடு மத்திய | பவானி |
| ” | மாலை 6.00 மணி | ஈரோடு தெற்கு | ஈரோடு கிழக்கு |
| ” | மாலை 7.00 மணி | ஈரோடு தெற்கு | மொடக்குறிச்சி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 31.03.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



# சாதனைகளின் மறுபெயர் தி.மு.க.! சாதனைச் செல்வர் ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்!

